(அ) உத்திரமேரூர் நடுநிலைப்பள்ளி மாணவர் சிலர் காணாமற் போனது.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 20—3—1987 அன்று கடத்தப்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

செங்கற்பட்டு (மேற்கு) மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பிச்சாண்டி (வயது 12) த/பெ. முனுசாமி, (2) ரங்கநாதன் (வயது 9), த/பெ. மாரிமுத்து, (3) சீனிவாசன் (வயது 5) த/பெ. மாரிமுத்து ஆகிய மூவரும் படித்து வருகின்றனர். பிச்சாண்டியும், ரங்கநாதனும் 4-வது வகுப்பிலும், சீனிவாசன் 1-வது வகுப்பிலும் படித்து வருகின்றனர்.

2. 20—3—1987 அன்று இம்மூவரையும் காணவில்லை என்று பிச்சாண்டியின் மாமன் திரு. கன்னியப்பன் கொடுத்த புகாரின் பேரில் வழக்கொன்று உத்திரமேரூர் காவல் நிலைய குற்ற எண் 71/87 இ.த.ச. பிரிவு 363-ன் கீழ் பதியப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

3. ஆனால், காணாமல் போனதாக குறிப்பிடப்பட்ட இம் மூன்று சிறுவர்களும் மறுநாளே (26—3 1987) 11-00 மணிக்கு தங்களது வீட்டிற்கு திரும்பி விட்டனர். விசாரணையில் பிச்சாண்டி மற்ற இரு சிறுவர்களையும் விளையாட்டுத்தனமாக வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வெள்ளாமலை கிராமத்தில் உள்ள தனது பாட்டி வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டதாகவும், பின்னர் திரும்பி விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

1987 ஏப்ரல் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

4. காணாமற் போனதாகக் குறிப்பிடப்பட்ட இம்மூன்று சிறுவர்களும் உடன் திரும்பி வந்து விட்டபடியால், இவ்வழக்கில் மேல்நடவடிக்கை இல்லை என முடிக்கப்பட்டது. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நடவடிக்கைகளை இடைமறிக்காதீர்கள். இவ்வளவுதான் சொல்வேன். (கூச்சல்—குழப்பம்). விதியை படித்துவிட்டு வாருங்கள். Please go through the Rules (குறுக்கீடுகள்).

திரு. க. நரசிம்மபல்லவன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டினுடைய காவல் துறையாவது சிறந்த முறையில் பணியாற்றுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் கொடுத்த புகார் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய பொறுப்பில் செயல்பட்டு வருகின்ற காவல் துறை துரித நடவடிக்கை எடுத்ததற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதற்காக பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினீர்களோ அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது; திருப்தி அடைந்திருப்பீர்கள் (கூச்சல், குழப்பம்). அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள்.

திரு. கி. மனோகரன்: * * * (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ரொம்ப சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது. You are all behaving like School Children இது எல்லாம் வேண்டாம். (கூச்சல்-குழப்பம்) இது முறையல்ல; முறையல்ல; முறையல்ல. இதற்கு அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன். ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறாது. (கூச்சல்-குழப்பம்) இன்றைக்கு ஒரு முடிவு செய்து வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்). இது முறையல்ல. எல்லோரும் அமருங்கள். அவையினுடைய நடவடிக்கைகளை இடைமறிக்காதீர்கள். (கூச்சல்—குழப்பம்).

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

I cannot give you permission. I have not given permission. I am not going to grant permission. எவ்வளவு சத்தம் போட்டாலும் கிடையாது; (கூச்சல்—குழப்பம்) திரு. என் .எஸ். வி. சித்தன் அவர்கள்.

(ஆ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு பதிவு செய்ய மறுப்பது குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு பயிரிடும் விவசாயிகளின் கரும்பை பதிவு செய்ய மறுப்பதால் கரும்பு பயிரிடும் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் தற்போதைய அரைவைத் திறன் நாளொன்றுக்கு 1,250 டன்கள். இதற்கு 7,500 ஏக்கர் கரும்பு தேவைப்படும். சர்க்கரை ஆலையின் முழு அரைவைத் திறனுக்குத் தேவைப்படும் கரும்பு மட்டுமே அந்த ஆலையினால் பதிவு செய்வது அவசியம். இருப்பினும் விவசாயிகளின் நன்மையைக் கருதி பெரம்பலூர் சர்க்கரை ஆலைப் பகுதியில் கூடுதலாகப் பயிரிடப்படும் கரும்பை மதுரை சர்க்கரை ஆலை, பொன்னி சர்க்கரை ஆலை மற்றும் சக்தி சர்க்கரை ஆலை ஆகியவற்றிற்கு அனுப்ப இந்த ஆலை விவசாயிகளுடன் கலந்து பேசி ஏற்பாடுகள் செய்துள்ளது.

2. என்னினும் நிரந்தரமான முறையில் கூடுதல் கரும்பைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் பெரம்பலூர் சர்க்கரை ஆலை தன்னுடைய அரைவைத் திறனை தினசரி 1,250 டன்களிலிருந்து தினசரி 3,000 டன்கள் அளவிற்கு விரிவாக்கம் செய்ய அனுமதி கோரிய விண்ணப்பம் மாநில அரசால் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. விரிவாக்கம் செய்ய அனுமதி கிடைத்தபின்